DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC-160/2023
Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | : மாரிமுத்து | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

14.12.2023

<u>முதல் விசாரணை</u>

1. நான் கமுதி சுந்தராபுரத்தில் வசித்து வருகிறேன். நான் வாடகை வாகனம் ஓட்டி தொழில் செய்து வருகிறேன். மனுதாரர் எனது சகோதரர். இதர சாட்சிகள் அனைவரும் எனது உறவினர்கள். ஆய்வாளருக்கும் எனக்கும் கமுதி பேருந்து நிறுத்தத்தில் உள்ள வாடகை டாக்ஸி ஸ்டாண்டில் Own board வண்டி வைத்து ஓட்டும் நபர்கள் மீது நான் கமுதி காவல் நிலையத்தில் 14.01.2015 ம் தேதியன்று புகார் அளித்தேன். அந்த புகார்க்காருக்கு மேற்படி காவல் நிலையத்தார் வழங்கிய புகார் மனு ரசீது ம.சா.ஆ.3 ஆகும்.

2. அந்த புகாருக்கு மேற்படி காவல்நிலையத்தின் ஆய்வாளர் A.G.முருகன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் 21.01.2015 ம் தேதியன்று காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தேன். அந்த புகார் மனு மற்றும் அனுப்பியதற்கான ரசீது ம.சா.ஆ.4 ஆகும்.

3. அதனால் ஆத்திரமடைந்த ஆய்வாளர் A.G.முருகன் என்னை பகைத்து விட்டு உங்களால் தொழில் செய்ய முடியுமா என்று மிரட்டினார்.

4. 14.05.2015 ம் தேதியன்று அதிகாலை 05.00 மணியளவில் கமுதி போலீசார் சுந்தராபுரத்தில் எனது வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த TN 65 Y 3129 என்ற பதிவு எண் கொண்ட TATA Indica வாகனத்தை எடுத்து சென்றதாக என் மனைவி எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார்.

5. அதே தேதியில் காலை 6 மணிக்கு கமுதி போலீசார் முஸ்டக்குறிச்சியில் உள்ள எங்களது வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றொரு வாகனமான TN–45–AL–8906 என்ற இருசக்கர வாகனத்தை உடைத்து எடுத்துக் கொண்டு சென்றதாக எனது அம்மா போன் மூலம் எனக்கு தகவல் தெரிவித்தார். நான் அப்போது

புதுக்கோட்டையில் உள்ள கடியாபட்டிக்கு சவாரிக்காக சென்றிருந்தேன்.

6. நான் தகவல் தெரிந்து 108 க்கு போன் செய்து விபரத்தைக் கூறினேன். உடனே இராமநாதபுரம் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு Call connect செய்யப்பட்டது. கமுதி காவல்நிலைய போலீசார் என் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களை எடுத்துச் சென்றதாக தெரிவித்தேன். அந்த போனல் பேசியதற்கான டைப் செட் மற்றும் சிடி ம.சா.ஆ.5 ஆகும்.

7. என் தம்பி சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க நீதிமன்றத்தில் புகார் அளித்துள்ளார். புகார்படி உத்தரவிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.